# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,622 — 1958 දෙසැම්බර් 26 වැනි සිකුරාදා — 26.12.1958**

**11,622 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

### பதவி வெற்றிடம்

### தொழிற் பகுதி

**போதனாசிரியர் தானங்கள்—தொழின்முறைப் பயிற்சித் திட்டம்.**

(I) கற்சிற்பர் (மேசன்) வேலை (II) தச்சுவேலைப் போதனாசிரியர் தானங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வேதனம் :** மாதமொன்றுக்கு ரூ. 300 முதல் ரூ. 360 வரை (மாறாத) சம்பளமாகும். இச் சம்பளத்திற்குப் படிகள் எவையும் கொடுக்கப்படமாட்டா. தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் தராதரங்கள், அனுபவம், தகுதியுடைமை ஆகியவற்றையனுசரித்தே சம்பளம் கொடுக்கப்படும். அரசாங்க இளைப்பாற்றிச் சம்பளம் பெறும் ஒருவர் நியமிக்கப்படுவராயின் அவருக்குரிய வேதனம் திறைச்சேரியின் ஆலோசனையுடன் நிர்ணயிக்கப்படும்.

2. **வேலை நிபந்தனைகள்.**—முதலாவதாக, இந்நியமனம் ஓராண்டுக்கு ஒப்பந்தத்தின் பேரில் செய்யப்படும். அதன் பின்னர் குறித்த ஒப்பந்தத்தின் சேவை நிபந்தனைகளுக்கு அமைய மேலும் சில காலத்திற்கு நீடிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் இத்தீவின் எப் பாகத்திற்கும் நியமிக்கப்படலாம்.

3. **தகுதிகள்.**—அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையராயிருத்தல் வேண்டும். மேலும், தாம்—

(அ) 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதியன்று 35 வயதிற்குட்பட்டவரல்ல என்பதற்கும், 55 வயதிற்குமேற்பட்டவரல்ல என்பதற்கும் ;

(ஆ) மிகச் சிறந்த குணமுடையவரென்பதற்கும், திடகாத்திரமானவரென்பதற்கும் ;

(இ) பயிற்சி பெறுவோருக்குப் போதிப்பதற்கு சிங்களத்தில் அல்லது தமிழில் அல்லது இரண்டிலும் போதிய கல்வியறிவு உடையவரென்பதற்கும் ;

(ஈ) தொழிற் பயிற்சி யாதாயினுமுட்பட அரசாங்கப் பகுதியொன்றில் அல்லது பெயர்பெற்ற வர்த்தக தாபனமொன்றில் குறைந்த பட்சம் 15 ஆண்டு அனுபவமுடையர் என்பதற்கும் ;

திருப்திகரமான சான்றளித்தல் வேண்டும்.

4. அபேட்சகர்கள் இங்கு நடத்தப்படும் தொழிற் பரீட்சையொன்றில் சித்தியடைதல் வேண்டும்.

5. கீழே குறிக்கப்பட்டுள்ளது போன்ற பத்திரத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டு, தொழில் அதிபர், தபாற்பெட்டி இல. 575, கொழும்பு, என்ற விலாசத்திற்கு 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கும்வண்ணம் அனுப்பப்படுதல் வேண்டும். பத்திரங்கள் இக்காரியாலயத்தால் வழங்கப்படமாட்டா. ஆனால், அபேட்சகர்கள் கீழ்க்கண்ட பத்திரத்தைப் பார்த்தெழுதி உபயோகித்தல் வேண்டும்.

6. கஸெற்றின் I ம் பாகத்தின் II ம் பிரிவிற் குறிக்கப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவைக்கு நியமிக்கப்படும் ஊழியர் யாவருக்கும் பொருத்தமுடையவையுமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

7. விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் அறிவிக்கப்படமாட்டாது.

தொழிற் பகுதி,
கொழும்பு, 22.12.58.

சா. ப. குமாரசிங்க,
தொழில் அதிபர்.

### மேற்கூறிய பத்திரம்

**தொழிற் பகுதியின் தொழின்முறைப் பயிற்சித் திட்டத்திற்கு *தச்சுவேலை/கற்சிற்பர் (மேசன்) வேலை, செங்கற்கட்டு வேலைப் போதனாசிரியர் தானங்கள்**

1. முழுப் பெயர் (தெளிவாக எழுதப்படவேண்டும்) : ————.
2. விலாசம் : ————.
3. பிறந்த தேதியும் இடமும்—
   (அ) அபேட்சகரினது : ————.
   (ஆ) அபேட்சகரின் தந்தையினது : ————.
4. எத்தேசத்தவர் ? ————.
5. தராதரங்கள் : ————.
   (தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)
6. (அ) சிங்களத்தில் (ஆ) தமிழில் போதிப்பதற்குத் தகுதியுடையவரா? ————.
7. மற்றும் தகுதிகள் : ————.
   (பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)
8. அனுபவம் பற்றிய முழுவிபரம் : ————.
9. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியவர்களின் பெயர்கள் : ————.
   (நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)
10. மற்றும் விபரம் யாதாயினும் : ————.

————————,
அபேட்சகரின் ஒப்பம்.

தேதி : ————*

*பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடுக.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### காணி அபிவிருத்திப் பகுதி

### கொப்பரு வாங்கும் விலைமனு

இக்கந்தோருக்குச் சேர்ந்த 18 அந். 3 குவா. 8½ இருத்தல் நிறையுள்ள கொப்பரு வாங்குவதற்கான விலைமனுக்கள் 1959 ம் ஆண்டு தை மாதம் 12 ம் திகதி முற்பகல் 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கொப்பரு கிறிலப்பொனையில் இருக்கும் மத்திய பண்டகசாலையில், அங்கிருக்கும் காணி அபிவிருத்தி அதிகாரியுடன் முன் ஒழுங்கின்படி பார்வையிடலாம்.

2. எல்லா விலைமனுக்களும் சீல்செய்யப்பட்டு, உறையில் இடப்பக்க மேல்மூலையில் “ கொப்பரு வாங்கும் விலைமனுக்கள் ” என்று குறிப்பிட்டு, காணியபிவிருத்தி அதிபர், கொழும்பு என்னும் விலாசத்திற்கு அனுப்பவேண்டும். மனுதாரின் பெயரும் விலாசமும் உறையின் இடப்பக்க கீழ்மூலையில் குறிப்பிடல் வேண்டும். விலைமனுக்கள் பதிவுத் தபால்மூலமாகவோ அல்லது கோல்பேஸ் செக்கிறெரறியேறியிலுள்ள நிர். 320 ம் அறையிலிருக்கும் கணக்காளரிடம் நேரடியாகவோ, கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. மேற்படி நிர். 320 ம் அறையில் விலைமனுக்கள் 1959 ம் ஆண்டு தை மாதம் 12 ம் திகதி, முற்பகல் 10.30 மணிக்குத் திறந்து பார்வையிடப்படும். மனுதாரிகள் விரும்பினால் அந்நேரம் சமூகமளிக்கலாம்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரிகள் அறிவித்தல் கிடைத்த ஒரு வாரத்திற்குள் மனுப்பண்ணின முழுத்தொகையையும் கொடுத்து கொப்பருவை தானே வாகனத்துக்கு ஒழுங்குசெய்து, அப்புறப்படுத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரிகள் கொப்பரு எடுக்கத் தவறினால் “ தகுதியற்றவர் ” இடாப்பில் பெயர் சேர்க்கப்பட்டு, பிறகு ஒருபொழுதும் அரசாங்க மனுக்களுக்கு மனுச்செய்யத் தகுதியற்றவர்களாக்கப்படுவார்கள்.

5. காணி அபிவிருத்தி அதிபர் ஒரு கேள்வியுமில்லாமல் மனுக்களை நிராகரிக்கவோ ஏற்றுக்கொள்வதற்கோ உரிமையுள்ளவர்.

காணி அபிவிருத்தி அதிபர்.

காணி அபிவிருத்திக் காரியாலயம்,
கொழும்பு,
1958 ம் ஆண்டு டிசம்பர் மீ 17 ந் உ.

## கடற்றொழிற் பகுதி

**மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் 24 கடற்றொழிலாளர் வீடுகளை நிர்மாணித்தல்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் 24 கடற்றொழிலாளர் வீடுகளை நிர்மாணிப்பதற்காய கேள்விகள், செனற் சதுக்கம், கொழும்பு-1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர்களால் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ம் திகதி புதன் கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொன்றும் 6 வீடுகளைக்கொண்ட கூறுகளுக்காய கேள்விகள், காலிமுகம், கொழும்பு-3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிட மிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலை களுக்காக ரூபா 15,000/- க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ந் திகதி பிற்பகல் 3 மணி வரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு-3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது கூறு ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/-ஐ வைப்புப் பணமாகக் கட்டி, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத்தொகைக்காய பற்றுச் சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. ஏனைய விபரங்களை கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. எ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு-3,
1958 ம் ஆடு டிசம்பர் மீ 20 ந் வ.

## கடற்றொழிற் பகுதி

**மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் கடற்றொழிலாளர் வீடமைப்புப் பிராந்தியத்தில் மூன்று கிணறுகளை நிர்மாணித்தல்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் கடற்றொழிலாளர் வீடமைப்புப் பிராந்தியத்தில் மூன்று கிணறுகளை நிர்மாணிப்பதற்காய கேள்விகள், செனற் சதுக்கம், கொழும்பு-1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர்களால் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு-3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 15,000/-க்கும் அதற்கு மேலும் பதிவு செய் தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ம் திகதி பிற்பகல் 3 மணிவரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு-3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா. 25. வைப்புப் பணமாகக் கட்டி, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத்தொகைக்காய பற்றுச் சீட்டைக் காண்பிக்கவேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. எ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபதி.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு-3,
1958 ம் ஆடு டிசம்பர் மீ 20 ந் வ.

## கடற்றொழிற் பகுதி

**திருகோணமலை மாவட்டத்தில் படுக்கையில் 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் 25 மலசலகூடங்களையும் நிர்மாணித்தல்**

திருகோணமலை மாவட்டத்தில் படுக்கையில் 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் 25 மலசலகூடங்களையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள் செனற் சதுக்கம், கொழும்பு-1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர்களால் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு-3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல்வேண்டும். கேள்விப் பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிடவேலை களுக்காக ரூபா 50,000/- க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ம் திகதி பிற்பகல் 3 மணி வரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு-3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 100/- வைப்புப் பணமாகக் கட்டி, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத்தொகைக்காய பற்றுச் சீட்டைக் காண்பிக்கவேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. எ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு-3,
1958 ம் ஆடு டிசம்பர் மீ 20 ந் வ.

## கடற்றொழிற் பகுதி

**கொழும்பு மாவட்டத்தில் லன்ஸியாவத்தையில் மலசலகூடங்களிணைக்கப் பெற்ற 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் 4 கிணறுகளையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள்**

கொழும்பு மாவட்டத்தில் லன்ஸியாவத்தையில் மலசலகூடங்களிணைக்கப் பெற்ற 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் 4 கிணறுகளையும் நிர்மாணிப் பதற்காய கேள்விகள், செனற் சதுக்கம், கொழும்பு-1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவ ரவர்களால் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு-3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல்வேண்டும். கேள்விப் பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 50,000/-க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ம் திகதி பிற்பகல் 3 மணிவரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு-3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 100/- வைப்புப் பணமாகக் கட்டி கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத்தொகைக்காய பற்றுச் சீட்டைக் காண்பிக்கவேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. எ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு-3,
1958 ம் ஆடு டிசம்பர் மீ 20 ந் வ.

## கடற்றொழிற் பகுதி

**புத்தளத்தில் மலசலகூடங்கள் இணைக்கப்பெற்ற 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் மூன்று கிணறுகளையும் நிர்மாணித்தல்**

புத்தளத்தில் மலசலகூடங்கள் இணைக்கப்பெற்ற 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் மூன்று கிணறுகளையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள், செனற் சதுக்கம், கொழும்பு-1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர்களால் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு-3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல்வேண்டும். கேள்விப் பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 50,000/- க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ம் திகதி பிற்பகல் 3 மணிவரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு-3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 100 வைப்புப் பணமாகக் கட்டி கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது இத்தொகைக்காய பற்றுச் சீட்டைக் காண்பிக்கவேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. எ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு-3,
1958 ம் ஆடு டிசம்பர் மாதம் 20 ந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.